# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2117/49 - 2019 අප්‍රේල් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.04.04

*2117/49 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்***

*32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழான பணிப்புரை*

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்ணாந்து ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 32(ஆ) மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், வலைப்பந்தாட்ட (நெட்போல்) விளையாட்டு தொடர்பான தேசிய சங்கமான இலங்கை வலைப்பந்தாட்ட (நெட்போல்) சங்கத்தின் பதிவினை உடன் செயற்படும் வண்ணம் இடைநிறுத்துவதுடன், தற்காலிக செயலொழுங்காக அச்சங்கத்தின் நடவடிக்கைகளை மேலும் நடாத்திச்செல்லும் பொருட்டு கீழ்க்குறிப்பிடப்படும் இடைக்கால கட்டுப்பாட்டுச் சபையினை நியமனஞ் செய்கின்றேன்.

1. திருமதி மிட்டிமானகே யமுனா பெரேரா - தலைவர்
2. திரு. ரஞ்சித் விமலசூரிய - செயலாளர்
3. திருமதி எதிரிசிங்க தேவகே ஆஷா லக்மாலி எதிரிசிங்க - பொருளாளர்

மேலும், இலங்கை வலைப்பந்தாட்ட (நெட்போல்) சங்கத்தின் உத்தியோகபூர்வ தேர்தலினை நடாத்துவதன் பொருட்டு 1973 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட பிரமாணங்களுக்கு ஏற்ப அச்சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தினைக் கூட்டி அதன் வாயிலாக தேர்தல் குழுவொன்றினை நியமனஞ் செய்வதனை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் செய்வதற்கும், தேர்தல் குழுவின் வாயிலாக தேர்தலுக்கான அழைப்பு விடுத்தல் மற்றும் தேர்தலை நடாத்துதல் போன்றவை பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் நடாத்துவதற்கும் அதிகாரத்தை வழங்குகின்றேன்.

ஹரீன் பெர்ணாந்து (பா. உ.),
தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு
மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

*2019, ஏப்பிறல் 03.*

*04-636*


1A - G 29827 — 22 (2019/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*